***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 76 / 2021*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 18*** |
| ***Name*** | : | **திரு. M.இளவரசு** |
| ***Father's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***10.10.2025***

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது, மதுரை மாவட்டம், எழுமலை காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.தினகரன் அவர்கள் காலமாகிவிட்டார். எனக்கு அவரது கையொப்பங்கள் நன்கு பரிட்சயம். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 2020 ம் ஆண்டு என்னுடைய காவல் வட்டத்திற்கு உட்பட்ட M கல்லுப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.21/2020, பிரிவுகள் 294(b), 324. 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act @ 294(b),302, 114 இதச வழக்கு கோப்பினை பார்வையிட்டு, ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் வாதியான சின்னச்சாமி என்பவரின் மனைவியான காயம்பட்ட அங்கம்மமாள் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில்

வைத்து, அவரது கணவர் சின்னச்சாமியிடம் புகாரைப் பெற்று, சார்பு ஆய்வாளர் திரு.தங்கையா என்பவர் நிலையம் வந்து, 28.01.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார். அவர் முதல் விசாரணை செய்து, சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, சாட்சிகள் மாரியப்பன், பெத்தனன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகள் மதன்மோகன், மாரியப்பன், செல்வரதி, ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு விசாரணையில் இருந்து வந்துள்ள நிலையில், சிகிச்சையில் இருந்த அங்கம்மாள், சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்ட தகவலை 12.00 மணிக்குப் பெற்று, சட்டப்பிரிவை 294(b), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ல் இருந்து 294(b), 324, 302, 506(2), இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ஆக பிரிவு மாறுதல் செய்து காவல் ஆய்வாளரின் மேல் விசாரணைக்கு வைத்துள்ளார். **பிரிவு மாறுதல் அறிக்கை உண்மை நகல் அதசாஆ.7 ஆகும்.**, அப்போதைய காவல் ஆய்வாளர் திரு.தினகரன் அவர்கள் விசாரணைக்குப் பெற்றுக்கொண்டார். ஆய்வாளர் திரு.தினகரன் அவர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டும், சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்த போது, ஏற்கனவே சார்பு ஆய்வாளரிடம் கூறியது போலவே ஆய்வாளரிடமும் கூறியதால் அவர் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும், சாட்சிகளான பொன்னுச்சாமி, பழனிச்சாமி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 29.01.2020 ம் தேதி இவ்வழக்கில் இறந்த போன அங்கம்மாளின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மேற்கொண்டு, பிரேதத்தின் உண்மையான இறப்பின் காரணம் அறியும் பொருட்டு, பிரேத பரிசோதனைக்கு வேண்டு கொள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.8 ஆகும்.** இவ்வழக்கின் எதிரிகளான சதீஷ்குமார், ராமர் ஆகியோர்கள் அன்றைய தினமே 13.00 மணிக்கு

T கிருஷ்ணாபுரம் விலக்கில் வைத்து கைது செய்துள்ளார். சாட்சிகள் சின்னச்சாமி, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில், 1 வது எதிரி சதீஷ்குமார் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1 வது எதிரியானவர் துல்லுக்குட்டிநாயக்கனூர் மயானத்திற்கு செல்லும் வழியில் உள்ள பாறை அருகில் முட்புதருக்குள் இருந்து எடுத்து ஆஜர் செய்த சம்பவத்திற்கு பயன்படுத்திய விறகு கம்பை அதே சாட்சிகள் முன்னிலையில் 14.30 மணிக்கு கைப்பற்றியுள்ளார். **1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.9 ஆகும். அத்தாட்சி அதசாஆ.10 ஆகும்.** விறகு கம்பு அசாபொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துடன் நிலையம் வந்து, எதிரிகளுக்கு திரேக சோதனை செய்து பாரா வசம் ஒப்புவித்தும், கைப்பற்றப்பட்ட சொத்தை படிவம் 95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 95 அதசாஆ.11 ஆகும்.** இவ்வழக்கில் மற்ற சாட்சிகளான சின்னச்சாமி, ராஜேந்திரன், காவலர்கள் லட்சம் மற்றும் சோரமுத்து, சார்பு ஆய்வாளர் சங்கையா, மருத்துவர்கள் சதாசிவம், மருத்துவர் மோகன்ராஜ், டாக்டர் சையது அப்துல்காதர் மற்றும் உதவி மின்பொறியாளர் திரு.சுதன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் அதசாஆ.3 பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். 2 வது எதிரியானவர் முன்ஜாமின் பெற்றுள்ளார். இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 324, 302, 506(2), இதச மற்றும் பிரிவு 4 of TNPHW Act ல் இருந்து பிரிவுகள் 294(b),302, 114 இதச ஆக பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆய்வாளர் திரு.தினகரன் அவர்களின் விசாரணையில் இருந்தும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது குற்றத்திற்கான ஆக்கக் கூறுகள் காணப்பட்டதால், வழக்கின் புலன் விசாரணை முடித்து, 1 வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 302 இதச

மற்றும் 2,3 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 302, 114 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

நான் இந்த வழக்கின் கோப்புகளை சரிபார்த்த பின்னர் தான் சாட்சியம் அளிக்கிறேன். போலிசார் விசாரணையில் சாட்சி சின்னச்சாமி என்பவர், "சம்பவ தினத்தில் மாலை 06.20 மணிக்கு, 1 வது எதிரி சதீஷ் சுவற்றில் உட்கார்ந்து இருந்தார் என்றும் அந்த சுவற்றில் உட்காருவதற்கு கல் போட்டிருந்தார்கள் என்றும்" சொல்லியுள்ளார் என்றால் அந்த இடத்தில் புதிய சாக்கடை கட்டி வருவதால், அந்த இடத்தில் ஒரு கல் போட்டு வைத்திருந்தார்கள், சதீஷ் என்ற சதீஷ்குமார் சாக்கடை சுவற்றில் உட்கார்ந்து என்று கூறியுள்ளார். சுவற்றில் உட்காருவதற்காக கல் போடப்பட்டிருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நானும் மாரியப்பனும் எனது மனைவியின் கையைப் பிடித்து தூக்கினோம் என்று சொல்லவில்லை. நாங்கள் என் மனைவியை வீட்டிற்குக் கூட்டிச் சென்ற போது, என் பேத்தி தேவஸ்ரீ என் மனைவிக்கு தண்ணீர் கொடுத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. அசா2 மதன்மோகன் போலிசார் விசாரணையில், எனது அப்பா காவல் நிலையம் சென்ற போது சார்பு ஆய்வாளர் சங்கையா என்பவர் அங்கு இருந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகாரைப் படித்துப் பார்த்தேன். புகாரில், "சத்தம் கேட்டு, சம்பவ இடத்திற்கு சின்னச்சாமி வந்து பார்த்ததாக" சொல்லவில்லை. எதிரிகளை கோப்பில் உள்ளது போல் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லைஎன்றும், 1 வது எதிரி கோப்பில் உள்ளவாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் இவ்வழக்கின் சான்று பொருளை 1 வது எதிரி ஆஜர்படுத்தவில்லை என்றும் பின்னிட்டு, வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி, சர்ன்று பொருட்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால்

சரியல்ல. கோப்பைப் பார்வையிட்டதில் இருந்து, உசிலம்பட்டி பாலா மருத்துவமனை, மதுரை VN மருத்துவமனை மருத்துவர்களை ஆய்வாளர் திரு.தினகரன் அவர்கள் விசாரணை செய்யவில்லை என்று தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள காவல் நிலையத்தில் உள்ள காவலர்கள் யாரையும் ஆய்வாளர் திரு.தினகரன் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் திரு.தினகரன் அவர்கள் சரிவர புலன்விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக புலன் விசாரணை செய்யப்பட்டு, எதிரிகளுக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அங்கம்மாளின் இறப்பிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்த அங்கம்மாள் மாரடைப்பினால் தான் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை